**அரசுத் தேர்வுகள் இயக்ககம் , சென்னை – 600 006**

**மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வு, ஜூன்/ஜூலை 2023**

**விடைத்தாட்களின் நகலினை இணையதளத்தில்**

**பதிவிறக்கம் செய்தல் மற்றும்**

**மறுகூட்டல்–II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பித்தல்**

**செய்திக் குறிப்பு**

ஜூன் /ஜூலை 2023, மேல்நிலை முதலாம் ஆண்டு துணைத் தேர்வு எழுதி விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்களின் விடைத்தாள் நகலினை 14.08.2023 **(திங்கட்கிழமை) காலை 11.00 மணி** முதல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று Notification–ஐ Click செய்தவுடன் **HSE First Year Supplementary Exam,** June/July 2023 - **Scan copy Download"** என்ற வாசகத்தினை "Click" செய்தால் தோன்றும் பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினைப் பதிவு செய்து தாங்கள் விண்ணப்பித்த பாடங்களுக்குரிய விடைத்தாட்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். -

விடைத்தாட்களின் நகலினை பதிவிறக்கம் செய்த பிறகு **மறுகூட்டல் –II அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க விரும்பினால்,** இதே இணையதள முகவரியில் Hr Sec First Year June/July 2023 – Application For Revaluation / Re–Totalling – II என்ற தலைப்பினை Click செய்து வெற்று விண்ணப்பத்தினைப் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

தேர்வர்கள் இவ்விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து, இரு நகல்கள் எடுத்து, 16.08.2023 **(புதன்கிழமை) காலை 11.00 மணி முதல் 18.08.2023 (வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணிக்குள்** சம்பந்தப்பட்ட மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திலும், புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாவட்டங்களில் (தென்காசி, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு) முதன்மைக்கல்வி அலுவலர் அலுவலகத்திலும் ஒப்படைக்க வேண்டும். மறுகூட்டல் – II மற்றும் மறுமதிப்பீட்டிற்கான கட்டணத்தினை மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் / முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் பணமாகச் செலுத்த வேண்டும்.

**<u>மறுமதிப்பீடு</u>**

| | |
|---|---|
| பாடம் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ. 505/– |

**<u>மறுகூட்டல்–II</u>**

| | |
|---|---|
| உயிரியல் பாடம் மட்டும் | – ரூ.305/– |
| ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) | – ரூ.205/– |

**ஓம்/–**
**இயக்குநர்**

**நாள்** : 11.08.2023.
**இடம் :** சென்னை – 600 006.